பாடம்
04

# நன்றி கூறுவோம்
# புகழ் பாடுவோம்

கூக்கு ......... கூக்கு.

மல்லிகாவின் வீட்டிற்குப் பக்கத்திலிருக்கும் வேலிப் பக்கமிருந்து வரும் சத்தம். காலையில் பாடசாலைக்குச் செல்லும் அருள் மல்லிகாவின் வீட்டுப் பக்கம் பார்க்கிறான்.



அழகான குயில் ஒன்று வேலியில் நின்றது. அது மட்டுமா அழகானதொரு பாடல். மல்லிகா அந்தக் குயில் என்ன சொல்லுகிறது என்று உங்களால் சொல்ல முடியுமா? என்று கேட்டான் அருள்.

ஐயையோ எனக்கு விளங்கவில்லை. எனக்குக் குயில்களின் மொழி தெரியாது என்றாள் மல்லிகா.

எனக்கும் குருவிகளின் மொழி தெரியாது. ஆனாலும் அவை பாடல் பாடி இறைவனைப் புகழுவது போல் எனக்குத் தோன்றுகிறது என்றான் அருள்.

கதையோடு கதையாகப் பாடசாலையும் வந்துவிட்டது என்றான் அருள்.

பாடசாலை மணி அடித்தது. எல்லோரும் ஒழுங்காகக் காலைக் கூடத்திற்கு வந்தார்கள். காலை வழிபாடு முடிந்த பின் முறையாக வகுப்புகளுக்குச் சென்றார்கள்.

மணி ஓசை கேட்கிறது. பாடசாலையில் பாட வேளைகள் ஆரம்பமாகின்றன. முதற் பாடம் சமயம். எல்லோரும் சமய பாட புத்தகங்களை எடுத்துக்கொண்டு எழுந்து நின்றார்கள்.

அன்றைய தினம் அருள் செபம் செய்தான். மற்றவர்கள் கரம் கூப்பிப் பக்தியுடன் பங்கு கொண்டார்கள். மாணவர்கள் ஆசிரியருக்கு மரியாதை செலுத்திவிட்டு அமர்ந்த பின் ஆசிரியர் பாடத்தை ஆரம்பித்தார். கற்பிக்கும் போது ஆசிரியர் "இறைவன் உங்களுக்கு என்னென்ன தந்துள்ளார் என்று சொல்ல முடியுமா என்று கேட்டார்.

"இன்றைய நாளை" என்றாள் ராதா.
பிரச்சினைகள் இல்லாமல் பாடசாலைக்கு வருவதற்கு வரம், பாதுகாப்பு, உணவு, சூரிய ஒளி, தண்ணீர், காற்று.
"குருவிகள் இறைவனைப் புகழ்ந்து பாடும் ஓசை" என்று அருள் கூறினான்.
"மிக நல்லது" என்றார் ஆசிரியர்.
இன்று இறைத் தந்தைக்கு நன்றி கூறி ஒரு செபம் எழுதுவோமா? என்று ஆசிரியர் கேட்டார்.
நாங்கள் ஆம் என்று, மகிழ்ச்சியுடன் கூறினோம். நான் இதோ இந்த அட்டையில் ஒரு செபம் எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன். அதை நாங்கள் இப்போது உரத்த சத்தமாக வாசிப்போம்.

**அன்பின் இறைத் தந்தாய் புதியதொருநாளை இன்று எமக்குத் தந்தமைக்கு நன்றி கூறுகின்றோம். இந்த நாளில் நாங்கள் செய்யும் எல்லா வேலைகளையும் உமக்கு ஒப்புக் கொடுக்கின்றோம். இன்று எங்களுக்கு வருகிற துக்கம் சந்தோசம் ஆகிய அனைத்தையும் நல்ல மனதோடு ஏற்றுக் கொள்ள வரம் அருளும் ஆமென்.**

நீங்கள் இரவு நித்திரைக்குப் போகுமுன் என்ன செய்வீர்கள் என்று ஆசிரியர் மறுபடி கேட்டார். பல் துலக்குவோம் என்றாள் மல்லிகா. ரூபவாஹினி பார்ப்போம் என்றான் அருள். நான் அம்மாவையும் அப்பாவையும் வணங்குவேன் என்றாள் சந்திரா.

ஆசிரியர் விடைகளைக் கேட்ட பின்னர் நல்லது பிள்ளைகள் என்றார். ஒவ்வொரு நாளும் படுக்கைக்குச் செல்லுமுன் இறைத் தந்தையுடன் உரையாட வேண்டும் என்று கூறிப் பாடத்தை முடித்தார்.

**ஒப்படை :**

1. நாம் இறைத் தந்தையுடன் கதைக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் நான்கு எழுதுக.

*** காலை எழுந்தவுடனும் மாலையில் படுக்கைக்குப் போக முன்பும் செபிக்க வேண்டும்.**